23rd October 1971]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஏற்கனவே அப்படி இருந்திருக்கலாம். சமீபத்தில் பல்வேறு மாவட்டங்களில் நான் நேரில் சென்று பார்த்தேன். சிலர்தான் பட்டம் தவறிப் பயிர் செய்கிறார்கள் என்றாலும், வேளாண்மை செய்கிறவர்கள் சம்பாவுக்குத் தனி, காருக்குத் தனி என்று பட்டங்கள் பிரித்து ஏறக்குறைய அந்தக் காலங்களில் தான் அந்தப் பகுதிகளில் பயிர் செய்கிறார்கள். அங்கத்தினர் சொல்கிற பகுதிகளையும் நான் நேரில் சென்று பார்த்தேன். அப்படிப்பட்ட பகுதிகளுக்கு ஒரே நேரத்தில் தெளிப்பதில்லை.

THIRU A. R. DAMODARAN: May I know, Sir, the cost of aerial spraying per acre?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, ஒரு ஏக்கருக்கு மருந்துச் செலவு அன்னியில் ரூ. 11 ஆகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ. 15.20 வசூலிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அதே சமயத்தில் சாதாரண பம்ப் மூலம் தெளிப்பதற்கு ரூ. 6 வசூலிக்கப்படுகிறது என்பதால் அனாவசியமாக நிலச்சுவான்தார்கள் கூடுதலாக ரூ. 7 கொடுப்பது கஷ்டமாக இருப்பதாகப் புகார் விவசாயிகளிடமிருந்து அரசிற்கு வந்திருக்கிறதா? அந்தச் சங்கடத்தைத் தவிர்க்க அரசு ஏதாவது செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பூச்சி மருந்து ஹெலிகாப்டர்கள் மூலமாகத் தெளிப்பதில் செலவு கொஞ்சம் அதிகமாகிறது. பம்புகளின் மூலம் தெளிப்பதில் செலவு குறைவாகிறது. விமானம் மூலம் தெளிப்பதற்கு அதிகம் செலவாகிறது என்றால், அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் எந்த மருந்தைக் கேட்கிறார்களோ, அந்த மருந்துகளைப் பொறுத்த வரையில், கொஞ்சம் கூடுதலாக இருக்குமே தவிர, வேறு வகையில் இருப்பதற்கு நியாயமில்லை.

* 21. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the cost of aerial spraying of insecticides is being sought to be collected from landholders who have leased out their lands; and

(b) if so, the provision under which the above charges are proposed to be collected?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தங்கள் நிலங்களை குத்தகைக்கு விட்டுள்ள நில உடைமையாளர்களிடமிருந்து பூச்சிக் கொல்லி மருந்துகளை விமானத்திலிருந்து தூவுவதற்கான செலவு வசூலிக்கப்பட வேண்டுமென்று கோரப்படுகிறதா?

[23rd October 1971

(இ) ஆம் எனில், எந்த விதித் துறையின் கீழ் மேற்படி செலவுகள் வசூலிக்கப்பட வேண்டுமென்று கருதப்படுகிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 119 (3) பிரிவின்படி விமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்ததற்காக செலவு தொகை வசூலிக்கப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாக அனுமதி பெற்று கிராமங்களுக்கு மருந்து தெளிப்பதாகச் சொல்கிறார்கள். தனிப்பட்டவர்கள் நிலங்களில் சொந்தச் சாகுபடி நிலங்களும் இருக்கின்றன. அவற்றில் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களும் இருக்கின்றன. குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களுக்கான கட்டணத்தை நில உரிமையாளர்களிடமிருந்து கேட்கிறார்கள். "லேண்ட் செஸ்", 'லேண்ட் ரெவின்யூ" மூன்று மடங்காக ஆகியிருக்கும்போது, அவர்கள் அதை எப்படிக் கொடுப்பார்கள்? அத்துடன் "லேண்ட் ரெவின்யூ" வசூல் செய்வதற்கான உத்தரவைத் தாசில்தார் பிறப்பிக்கிறார். ஆனால் இதை வசூல் செய்வதற்கு எந்த அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குத்தகைதாரர் உரிமைதாரரிடம் வசூல் செய்கிற முறையில் இப்போது செய்யப்படுகிறது. அவர்களுடைய சம்மதத்தையும் பெறுவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, is the entire cost of aerial spraying collected from the Agriculturists or is any part of it borne by the Government or the Panchayat Union? As the Hon. Minister pointed out, I think, the aerial spraying is undertaken not only in the interest of the particular agriculturists but also in the interest of the entire area. While so, is it not proper that a part of the cost is borne by the Panchayat Union or at least by the Government?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் மூலமாக பூச்சி மருந்து தெளிக்க 15% சப்சிடி கொடுக்கப்பட்டு வருகிறது. நிலங்களைப் பொறுத்த வரையில், தனிப்பட்டவர்கள் ஒரு சிலரால் பஞ்சாயத்துக்கள் மூலம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டால், பூரா ஏரியாவுக்கு சம்பந்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்காமல் நில உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கும்போது 60/40 என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுமா? அப்படி வசூலிப்பது எந்த அதிகாரத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறது?

23rd October 1971]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பஞ்சாயத்துக்களில் தீர்மானம் போட்டு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள் எங்கள் பகுதிக்குத் தேவையில்லை என்று தீர்மானம் போட்டு அனுப்பினால், அவற்றிற்குத் தெளிப்பதில்லை. சொந்தத்தில் பஞ்சாயத்தின் மூலமாக பவர் ஸ்ப்ரே, ஹாண்ட் ஸ்ப்ரே மூலமாக அவர்களாகவே மருந்து வாங்கித் தெளிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### *Tractors*

*22. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of R.S. 09 Tractors allotted by the State Trading Corporation of India to Tamil Nadu;

(*b*) the number of Tractors sold; and

(*c*) whether any complaints have been received about their defective working?

### டிராக்டர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய அரசு வாணிகக் கழகம் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீடு செய்த R. S. 09 டிராக்டர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) விற்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அவை செயல்படுவதில் குறைபாடுகள் இருப்பதாகப் புகார்கள் எவையேனும் பெறப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) நூறு.

(இ) பதினாறு.

(உ) ஆம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** வரவழைக்கப்பட்ட சோஷலிச டிராக்டர்கள் 100 ஒதுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்த 100-ஐயும் அரசு விலைக்கு வாங்கியதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, 100-ஐயும் வாங்க நம்மை மத்திய அரசு அனுமதிக்கவில்லை. யாரும் அதை வாங்காத காரணத்தால், அவை அப்படியே இருக்கின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அதற்கான தொகையை அரசு கொடுத்து விட்டதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இன்னும் இல்லை.